அவர்கள் அனுமதிக்கவில்லை. எனவே அடுத்த ஆண்டிலே அனுமதிக்கப்படுகின்றபோது முன்னுரிமையின் அடிப்படையிலே இந்தப் பகுதியை எடுத்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். அதே நேரத்திலே உள்ளாட்சித் துறையினுடைய சார்பாக அங்கே டிஸ்பன்ஸரி திறப்பதைப்பற்றி நான் ஒன்றும் சொல்ல முடியாது. அந்தத் துறையினுடைய சார்பாக நீங்கள் கேட்ட வேண்டும். ஆனால் இப்போது இருக்கின்ற கொள்கைப்படி உள்ளாட்சித் துறையினுடைய சார்பாக டிஸ்பன்ஸரிஸ் திறப்பதற்கான வாய்ப்பு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் துறையே, நல்வாழ்வுத் துறையே அதை கவனிக்க வேண்டும் என்ற ஒரு கொள்கை முடிவு எடுத்திருக்கின்ற காரணத்தினாலே இதிலே சாத்தியக் கூறு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 505. திருமதி ப. சரஸ்வதி. மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்

505—

பரமத்தியில் பணிமனை ஏற்படுத்துதல்

***35991**—*திருமதி ப. சரஸ்வதி:*

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமத்தியில் அகதிகள் முகாம் உள்ள புறம்போக்கு இடத்தில் அண்ணா போக்குவரத்துக் கழகப் பணிமனை ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): அண்ணா போக்குவரத்துக் கழகம் வேலூரில் (பரமத்தி வட்டம்) உள்ள பொத்தனூர் கிராமத்தில் அண்ணா போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்க மாரியம்மன் கோவில் நிலத்தினை தேர்வு செய்து இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையினரிடம் நடவடிக்கையில் உள்ளது. பரமத்தி அகதிகள் முகாம் உள்ள இடத்தில் அண்ணா போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

1995 மே 2]

முற்பகல் 11-10

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொத்தனூர் மாரியம்மன் கோவில் நிலமானது காவிரி ஆறு அங்கே பாய்ந்து வருகின்ற காரணத்தால் சதுர அடியின் விலை தான் போடுவோம் என்று சொல்லி ஒரு ஏக்கராவது கிட்டத்தட்ட 8 லட்சம் ரூபாய்க்கு மேல் விலை நிர்ணயம் செய்ததால் அந்த முயற்சியானது அண்ணா போக்குவரத்துக் கழகத்தால் கைவிடப்பட்டுள்ளதாக அறிகிறேன். தற்போது பரமத்தியிலுள்ள அகதிகள் முகாமுக்கு அருகில் தோப்பு புறம்போக்கு வருவாய்த் துறையிடம் கிட்டத்தட்ட 12 ஏக்கர் நிலம் இருக்கிறது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்-என்னுடைய தொகுதியானது தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழ்கின்ற தொகுதி—அந்தத் தொகுதி மக்களின் மீது கருணை கொண்டு அந்த தாலுக்கா நாமக்கல்லிருந்து பிரிக்கப்பட்டதற்குப் பின்னர் இன்னும் முன்னேற்றம் அடையாத சூழ்நிலையில் இருப்பதால் அந்தத் தொகுதியில் மேலும் போக்குவரத்தை விஸ்தரிப்பதற்கு இந்தப் பணிமனையை அந்த அகதிகள் முகாமுக்கு அருகில் உள்ள இடத்தில்—அங்கே அகதிகள் அனைவரும் தங்களுடைய தாயகம் திரும்புகின்ற சூழ்நிலையில் 75 சதவீதத்தினர் திரும்பி விட்டனர். காலியாக உள்ள அந்த இடத்தில்—நிறுவுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவே உதவிக்கரம் நீட்டும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி) அதை பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளும்.

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏசுவோர் ஏசட்டும், புழுதி வாரித் தூற்றுவோர் தூற்றட்டும், என் கடன் தமிழக மக்களுக்கு பணி ஆற்றுவதே என சூளுரைத்து தமிழக மக்களின் குறையை நீக்கி மனித நேயத்தோடு, தொலைநோக்குப் பார்வையில் நல்ல திட்டங்களைத் தந்துள்ள புனித அன்னையின் ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையில் 1989-ல் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான் எதிர்காலத்தில் தமிழகத்தை வழி நடத்தும் அன்னை என்று தீர்மானித்து சேவல் சின்னத்தையே வெற்றி அளிக்க வைத்த என்னுடைய தொகுதி மக்களின் மீது கருணை கொண்டு இரண்டொரு மாதங்களில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களிடமிருந்து அந்த இடத்தைப் பெற்று பணிமனையைத் துவக்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை இடையூறுகள் வந்தாலும் அதைத் தகர்த்து எறிந்து விட்டு (மேசையைத் தட்டும் ஒலி) சாதனை படைத்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 506, திரு.தா. வேடியப்பன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

506—

போளூரில் பணிமனை அமைத்தல்

***36590**—*திரு. தா. வேடியப்பன்:*

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூரில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக பணிமனை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): போளூரில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்க போளூர் அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி கோவிலுக்குச் சொந்தமான நிலங்களைக் கையகப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக பணிமனைக்காக அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி கோவிலினுடைய இடத்தை 4 ஏக்கர் 97 சென்ட்டை பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்திற்கு ஒப்படைப்பதற்காக இந்து அறநிலையத் துறை ஆணையாளர் மூலமாக அதற்கான காசோலையை பெற்றுக்கொண்டு நிலத்தை ஒப்படைத்து இருக்கிறார்கள். கூடிய விரைவில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டிலேயே அதற்கு நிதி ஆதாரம் ஒதுக்கி கட்டிடப்